விலை : ரூ.

ISBN 9 788198 977472

பக்தி இலக்கியங்களில் தமிழ் வளர்ச்சி [கட்டுரைத் தொகுப்பு]

அகல் பதிப்பகம்

# பக்தி இலக்கியங்களில் தமிழ் வளர்ச்சி

[கட்டுரைத் தொகுப்பு]

பதிப்பாசிரியர்

முனைவர் சே. திருநாவுக்கரசு

தொகுப்பாசிரியர்

முனைவர் ஏ. கோதண்டராமன்

அகல் பதிப்பகம்

# பக்தி இலக்கியங்களில்

# தமிழ் வளர்ச்சி

(கட்டுரைத் தொகுப்பு)

பதிப்பாசிரியர்
முனைவர் சே. திருநாவுக்கரசு

தொகுப்பாசிரியர்
முனைவர் ஏ. கோதண்டராமன்
இணைப் பேராசிரியர் மற்றும் ஒருங்கிணைப்பாளர்
தமிழ்த்துறை,
அகர்சந்த் மான்மல் ஜெயின் கல்லூரி [சுழல் – 2],
மீனம்பாக்கம், சென்னை – 600 061.

அகில் பதிப்பகம்
சென்னை

18. சைவ வைணவத்தில் அறிவியல் சிந்தனைகள்
- **ச.இராதாகிருஷ்ணன்** ........ 134

19. திருமந்திரத்தில் காணலாகும் உடல் மீதான கருத்தாக்கங்கள்
- **முனைவர் ச. பிரபாகரன்** ........ 144

20. தமிழ் வளர்ச்சியில் ஐரோப்பியரின் பங்களிப்பு
- **முனைவர் மோ.கிறிஸ்டி** ........ 149

21. வள்ளலாரின் இறைவழிபாடும், தமிழ்ப்பணியும்
- **முனைவர் ம. அருள்தாஸ்** ........ 157

22. இசுலாமிய பக்தி இலக்கியத் தமிழ் வளர்ச்சியில் மாலைகள் - பல்சந்தமும் மிகுராசு மாலையும் - **முனைவர் பா. மொய்தீன் ஆரிப்** ........ 163

23. நாலாயிர திவ்விய பிரபந்தத்தில் தமிழ்ப் பயன்பாடு
- **முனைவர் மு. காமராஜ்** ........ 169

24. ஞானத்தமிழ் வளர்த்த ஞானசம்பந்தர் **முனைவர் கி. அன்பு** ........ 174

25. இஸ்லாமிய தமிழ் இலக்கிய முன்னேற்றத்தில் இஸ்லாமிய இலக்கிய கழக மாநாடுகளின் பங்களிப்பு -**முனைவர் மு.முஹம்மது ரஃபீக்** 183

26. சைவ இலக்கியங்கள் - **எஸ்.கலா** ........ 192

27. மக்களின் செல்வாக்கைப் பெற்றதா? கந்தபுராணம்
- **முனைவர் பொன் சண்முகம்** ........ 199

28. நம்மாழ்வாரின் நான்மறைகள் **முனைவர் த. ராதிகா லட்சுமி** ........ 204

29. சைவ இலக்கியமும் தமிழ் வளர்ச்சியும் - **பா. மோகனா** ........ 211

30. ஆண்டாளின் இறையும் இலக்கியப்பணியும் - **அ. நித்தியபாலா** ........ 216

31. பெரியபுராணமும் இறைச் சிந்தனைகளும்
- **திருமதி. மு.கார்த்திகா** ........ 223

32. தமிழ் காப்பியங்களில் பௌத்தம் - **சே. செண்பகம்** ........ 231

33. இரட்சணிய யாத்திரிகத்தில் தற்குறிப்பேற்ற அணி
- **அ.அருண்குமார்** ........ 239

34. அருள்மிகு மாசாணியம்மன் வரலாறும் வழிபாடும்
- **முனைவர் மு. இராதா** ........ 247

35. சைவம் வெளிப்படுத்தும் இறையன்பு
- **முனைவர் கே.எஸ்.பிரணதார்த்திஹரன்** ........ 254

36. சைவ சமயமும் சிவ வடிவங்களும் - **முனைவர் கி. அன்பு** ........ 260

37. சிவவாக்கியரின் இறை வழிபாட்டுச் சிந்தனை
- **முனைவர் மு. முஸ்தபா** ........ 271



38. வைணவ இலக்கியங்களில் அகப்பொருள் மரபுகள்
- **முனைவர் கே.சி.ஆர். ஷிஜி** ........ 276

39. திருமங்கையாழ்வாரின் பாடல்களில் இலக்கிய வடிவங்கள்
- **முனைவர் கி. அன்பு** ........ 282

40. திருவள்ளுவரும் கடவுள் கோட்பாடும் - **ந. திருமால்** ........ 292

41. இசுலாமிய நாட்டுப்புறப் பாடல்களில் பக்தியின் விழுமியங்கள்
- **முனைவர் சா. இன்குலாப்** ........ 299

42. ஆண்டாளும் திருப்பாவையும் - **முனைவர் சு. தீபா** ........ 306

43. ஆயர் வழிபாடுமுறைகள் - **முனைவர் ம. காயத்ரி** ........ 312

44. சித்தர் இலக்கியங்களில் பக்தி நெறி **முனைவர் மு. முஸ்தபா** ........ 318

45. அப்பாண்டைநாதர் உலாவில் காணலாகும் பக்தி
- **முனைவர் து.பத்மமாலதி** ........ 322

46. முத்தித்தராயன் கோயில் வரலாறும் அமைப்பும்
- **ம. இராஜகணபதி** ........ 331

47. குடகர்களின் பக்தி நெறி - **மு. கோகிலா** ........ 338

48. பக்தி இலக்கியங்களில் வேளாண்மை - **முனைவர் வெ.பரிமளம்** ........ 344

49. பௌத்தம் வளர்த்த தமிழ் - **முனைவர் வே. லீலாவதி** ........ 350

50. தமிழ் வளர்ச்சியில் தேவாரத்தின் பங்கு
- **முனைவர் ஆ. சிவனருட்செல்வி** ........ 359

51. திருவாசகம் திருப்பொற்சுண்ணம் - **முனைவர் அரு.அபிராமி** ........ 364

52. வைரமுத்துப் படைப்புகளில் சமுதாயம் - **வெ. கவிதா** ........ 368

53. ஆண்டாள் உணர்த்திய வாழ்வியலும் - பண்பாடும்
- **முனைவர் ஜா. மாலா** ........ 383

54. குழிஇருசாயி வழிபாடு - **இ தினேஷ்** ........ 389

55. சைவம் வளர்த்த தமிழ் - **முனைவர் சு. செல்வக்குமார்** ........ 398

56. ஆண்டாள் பாசுரங்களில் பக்தி நெறி - **வே. பிரவீனா** ........ 404

57. திருப்பாவையில் குறிப்புப் பொருள்கள்
- **முனைவர் ச. இரா.செம்மலர்** ........ 413

58. சைவ சமய குரவர்கள் - **கு. தீபரதி** ........ 420

59. சித்தர் இலக்கியங்களில் பக்தி நெறி - **திருமதி. கோ. ஹேமலதா** ........ 429

60. நாட்டார் தெய்வங்கள் **முனைவர் வ. மோகனப் பிரியா** ........ 434

61. இமாம் அல்-அரூஸ் மாப்பிள்ளை லெப்பை ஆலிம் அவர்களின் கல்வி மற்றும் சமூக சேவைகள்:ஒரு பன்முகப் பார்வை. - **Mr. Mohamed Ali** ........ 439

# ஆயர் வழிபாடுமுறைகள்

**முனைவர் ம.காயத்ரி**
உதவிப் பேராசிரியர், தமிழ் இலக்கியத்துறை
நல்லமுத்துக்கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி.
பொள்ளாச்சி.

முல்லை நிலத் தெய்வமான மாயோனைத் திருமால் என்றும் கூறுவர். வடபுலம் கண்ட கிருஷ்ணனோடும் அவனுடன் ஐக்கியமடைந்த விஷ்ணு முதலியோருடனும் மாயோன் சங்ககாலத்துக்கு முன்பே ஒன்றிவிட்டான். மாயோன், கிருஷ்ணன் என்ற இரு பெயர்களுமே கரு நிறத்தோன் என்ற பொருள்படும். அந்தப் பெயர் ஒற்றுமை இரு தெய்வங்களும் ஐக்கியமடைவதற்கு வாய்ப்பாக அமைந்திருக்கலாம்.

மாயோனைப் பற்றிய வியப்பான கதை ஒன்றைப் புறநானூறு பாடல் 174-யில் பிறரை வருத்துவதையே இயல்பாகக் கொண்ட அவுணர் ஞாயிற்றைக் கொண்டு போய் மறைத்து வைத்தார்கள். அதனால் உலகில் இருள் அடர்ந்தது. அப்போது அஞ்சன வண்ணன் (மாயோன்) பகலவனை மீட்டுக் கொணர்ந்து ஆகாயத்தில் நிறுத்தி உலகத்தின் துயரைத் துடைத்தான் என்று குறிப்பிடுகின்றனர். வடநூல் அறியாத கதை இது. எனவே, இது பண்டைய தமிழகம் போற்றிய மாயோனைப் பற்றிய பழமரபுக் கதையாகும்.

அவுணரை வென்ற மாயோனின் அவதார நாள் திருவோணம் என்றும், ஓணநாளில் சங்ககாலத் தமிழர் விழா எடுத்தனர் என்றும் மதுரைக்காஞ்சியில் 590-591 ஆம் பாடலடிகள் எடுத்துரைக்கின்றன. அந்த மரபின் வலிமைகளைப் பின்னாளைய இலக்கியமும் புலப்படுத்தும். கண்ணன் பிறந்த நாள் உரோகிணி என்பது புராணக் கூற்றாக, அவன் திருவோணத்தில் பிறந்தான் என்பர் பெரியாழ்வார். ஓணத்தான் உலகாளும் (1,1;3) என்றும் அத்தத்தின் பத்தாம் நாள் (திருவோணம்) தோன்றிய அச்சுதன் (1,2;6) என்றும் நீ பிறந்த



திருவோணம் (2.4;2) என்றும் அவர் கண்ணனைக் குறிப்பிடுவார். மாயோன் பிறந்த நாளையே அவர் கண்ணன் பிறந்த நாளாகக் கூறுகிறார். திருமழிசை ஆழ்வார் ஓணவிழாவை விஷ்ணுவுக்கு உரியதென்பார்.(4;41). ஓணப்பிரான் என்று விஷ்ணுவைக் குறிப்பிடும் தேவாரம் (643,10). பிறரைக் காட்டிலும் அதிகமாக மரபைப் போற்றும் கேரள மக்கள், ஆவணி மாதத்தில் ஓணவிழாக் கொண்டாடுவதும் சங்ககாலத் தமிழரின் மாயோன்நாள் விழாவுடன் தொடர்புடையதாகும்.

யமுனைக்கரை மதுரையிலும் கடற்கரைத் துவாரகையிலும் புகழ் எய்திய யாதவர் சந்திரகுல க்ஷத்திரியராவார் என்பதே முன்னாளைய மரபுரையாகும். எனினும், குப்தர் காலத்தில் இறுதி உருப்பெற்ற புராணங்கள், யாதவ குலத் தோன்றலான கண்ணனுக்கு ஆயர் தொடர்பு கண்டு அவனைக் கோவிந்தனாகச் சித்திரிக்கின்றன. தேவகி மைந்தனான கண்ணன், ஆயர்பாடியில் யசோதை கையில் வளர்ந்து, கண்ணன் ஆயர் மகளிருடன் ஆடிய கூத்துவகை நிகழ்த்தியதாக அப்புராணங்கள் கூறுகின்றன. மாயோன் முல்லைநில ஆயர்களின் இறைவனாக விளங்கியதாலும், கண்ணன் ஆயர் மங்கையருடன் விளையாடிய செய்திகளைப் புராணங்களுக்கு முற்பட்ட தமிழ் இலக்கியம் கூறுவதாலும், மாயோனின் அருட் செயல்களே கண்ணன் செயல்களாகக் கூறப்பெறுகின்றன. மேய்ச்சல் நாடிச் சென்ற தென்புல ஆயர்கள் வடக்கே கோவிந்தன் வழிபாட்டைப் பரப்பினர். கிறிஸ்தவ சகாப்தத்தின் தொடக்க நூற்றாண்டுகளில், மேற்குத் தக்காணத்திலும், மாளவத்திலும், தெற்கு ராஜஸ்தானத்திலும் சிந்துப் பிரதேசத்திலும் எழுச்சியுற்ற ஆபீரர்கள் கோவிந்தன் வழிபாட்டுக்கு வடபுலத்தில் பேராதரவு திரட்டினர் என்பது வரலாற்று அறிஞர் கருத்தாகும்.

யமுனை ஆற்றில் நீராடிய ஆயர் மங்கையர்க்கு மரத்தை மிதித்து வளைத்துக் கொடுத்து, மரத்தின் தழைகளை அவர்கள் உடுத்திக்கொள்ள வழி செய்தான் கண்ணன் என்று அகநானூறு பாடல் 59இல் குறிப்பிடுகின்றனர். சிலப்பதிகார ஆய்ச்சியர் குரவையிலும் இச்செய்தி வருகிறது. ஆயர்மகளிர் கரையில் வைத்திருந்த ஆடைகளைக் கண்ணன் விளையாட்டாக எடுத்து மறைத்தான் என்றும், அப்போது பலராமன் அங்கு வருவதைக்

கண்ட கண்ணன் தன் செயலை மறைக்கவும் பெண்களின் மானத்தைக் காக்கவும் மரத்தை வளைத்தான் என்றும், இச்செய்திக்கு விளக்கம் கூறுவர். ஆயர் பெண்களுடன் கண்ணன் விளையாடியதற்கு அகநானூற்றுப் பாடலே, இந்திய இலக்கியத்தில் தொன்மையான சான்றாகும்.

மேலும், சிலப்பதிகாரத்தில் இடம்பெறும் ஆய்ச்சியர் குரவையில் கோவலன் வெட்டுண்டபோது, ஆயர் சேரியில் பல வகை உற்பாதங்கள் நிகழ்ந்தன. அப்போது, ஏழு கன்னியரைக் கொண்டு குரவை ஆடிக் கண்ணனை வழிப்படுவதற்கு மாதரி ஏற்பாடு செய்கிறாள். எழுவரில் ஒருத்தி கண்ணன் என்றும், இன்னொருத்தி பலராமன் என்றும், மற்றொருத்தி நப்பின்னை என்றும் ஏனைய நால்வரும் வேறு ஆயர் மகளிர் என்றும் பாவனை செய்துகொண்டு அவர்கள் குரவையாடுகின்றனர். கண்ணன் ஆயர்பாடியில் கோபிகைகளுடன் ஆடிய குரவையையே அங்கு ஆடுகின்றனர். முருகனும் இம்மாதிரியே குறவர் மகளிருக்குத் 'தலைதந்து' குரவை ஆடுவான் என்பார் நக்கீரர்.'' (திருமுருகு.216-217) இறைவன் ஆன்மாக்களிடம் அன்பு கொண்டு, அவற்றோடு ஒருங்கு மகிழ்ந்து குலாவும் உண்மையைக் குறிப்பதாகக் குரவைக்கூத்து முருக வழிபாட்டிலும் மாயோன் வழிபாட்டிலும் சங்க காலத்தில் இடம்பெற்ற தென்பது இதிலிருந்து அறிய முடிகின்றன.

கண்ணனுக்கு விருப்பமான தேவி ஆயர்மகளான நப்பின்னையே என்பது தமிழ் வழக்கு. நப்பின்னையை வடமொழிப் புராணங்கள் அறியா; ஆயர்மகளிர் யாரையும் கண்ணன் மனைவியாக அவை குறிப்பிடவில்லை. இராதையும் இடையர் குலப்பெண்ணே என்பதும், இடைக்காலத்தில் வடபுலத்தில் எழுந்த பக்தி இயக்கம் இராதையைச் சிறப்பாக வழிபட்டது என்பதும் உண்மையே ஆகும். ஆனால் இராதை கண்ணனின் காதலியாகவே போற்றப் பெறுவாள். பண்டைய தமிழரோ வடபுலம் அறியாத நப்பின்னையைக் கண்ணன் உகந்த மனைவியாகப் பரப்பினர். எனவே, கோவலனுக்குக் கண்ணகி உணவு படைப்பதைக் கண்டபோது வியந்தனர் என்பதை,



"ஆயர் பாடியின் அசோதை பெற் றெடுத்த
பூவைப் புதுமலர் வண்ணன் கொல்லோ.
நல்லமுது உண்ணும் நம்பி! ஈங்குப்
பல்வளைத் தோளியும் பண்டுநம் குலத்துத்
தொழுனை யாற்றினுள் தூமணி வண்ணனை
விழுமம் தீர்த்த விளக்குக கொல் என
ஐயையும் தவ்வையும் விம்மிதம் எய்தி
கண்கொளா நமக்கு இவர் காட்சி, ஈங்குஎன"
- (சிலம்பு.16. 46-53)

என்ற இளங்கோவின் பாடலடிகள் எடுத்துரைக்கின்றன. இங்குக் கோவலனைக் கண்ணனுக்கு ஒப்பிட்ட மாதரியும் ஐயையும், கண்ணகியை ருக்மிணிக்கோ வேறு தேவியர்க்கோ ஒப்பிடாது நப்பின்னைக்கே ஒப்பிடுகின்றனர். சங்ககாலத் தமிழகத்தில் நப்பின்னைக்கு இருந்த ஏற்றம் இதிலிருந்து விளங்கும். ஆழ்வார்களும் கண்ணன் தேவியருள் நப்பின்னையையே தலைமையாகப் போற்றுவர். நப்பின்னையைத் தமிழ் நூல்கள் புகழ்வதையும் வடநூல்கள் அறியாதிருப்பதையும் கருதும்போது, ஆயர்க்கு இறைவனான மாயோனின் தேவியாகத் தமிழ் மண்ணில் உயர்நிலை மேவிய ஆயர்மகள் நப்பின்னை என்பதை அறியமுடிகிறது.

சங்க காலத்துக்கு முன்பே மாயோன் என்னும் திருமால் விஷ்ணு -கிருஷ்ணனோடு ஐக்கியமானதால், வடபுல வைணவம் கண்ட கதைகளும் கருத்துக்களும் சங்க இலக்கியத்தில் போற்றப்பெறுவதில் வியப்பில்லை. திருமாலைக் கருடக் கொடியோன் என்பார் நக்கீரர். (திருமுருகு.150-151) திருமகளை மார்பில் உடையோன் என்றும், (பெரும்பாண்.29-30) 'பாம்பணைப் பள்ளி அமர்ந்தோன்' என்றும்'' (பெரும்பாண்.371-373) 'உந்தித் தாமரையிலிருந்து பிரமனைத் தோற்றுவித்தான்' என்றும்'' (பெரும்பாண்.402-404) கூறுவார் உருத்திரங் கண்ணனார். அவனைச் சக்கரபாணி என்பார் ஆலம்பேரி சாத்தனார்.(அகம்.175) பூமி அடியாக, கடல் உடையாக, வானம் மேனியாக, சூரிய சந்திரர் கண்ணாக, அனைத்தையும் தன்னுள்ளே அடக்கிய சக்கரபாணியான வேத முதல்வன் என்பர் பெருந்தேவனார்.(நற்றிணை கடவுள்) அந்தணர் அருமறை அவன் பெருமையையே ஓதும் என்பதைப் பரிபாடல் 1,2,3,4 ஆம் பாடல்கள் எடுத்துரைக்கின்றன. அவன்

மந்தர மலையை மத்து ஆக்கி, வாசுகி என்னும் பாம்பைக் கடை கயிறாக ஆண்டு, பாற்கடலைக் கடைந்த. கடல் வண்ணன் என்பர் இளங்கோ அடிகள் (17:32), கஞ்சனின் வஞ்சம் வென்றானும் வானவர் போற்றவும். வேதம் முழங்கவும் பஞ்ச பாண்டவர்காகத் துரியோதனாரிடம் தூது சென்றானுமான கண்ணன் நாராயணனின் அவதாரமே என்று இசைப்பதனை,

“மடம்தாழும் நெஞ்சத்துக் கஞ்சனார் வஞ்சம்
கடந்தானை, நூற்றுவர்பால் நாற்றிசையும் போற்றப்
படர்ந்துஆ ரணம் முழங்கப் பஞ்சவர்க்குத் தூது
நடந்தானை ஏத்தாத நாவென்ன நாவே?
நாராயணா! என்னா நாவென்ன நாவே?” - (17:37)

என்னும் பாடலடிகள் எடுத்துரைக்கின்றன.

புகார், மதுரை, அழகர் மலை, ஆடக மடம் என்னும் இடங்களில் திருமால் கோயில் இருந்ததை இயம்புவதோடு, ஸ்ரீரங்கத்தில் ஆதிசேடனைப் பாயாகக்கொண்டு திருமால் பள்ளிகொண்டிருக்கும் திருக்கோலத்தையும், திருவேங்கடத்தில் நெடியோன் நின்ற வண்ணத்தையும் விதந்தோதுவர் இளங்கோ அடிகள். ‘‘திருவெஃகாவில் (காஞ்சி நகரிலுள்ள திருமால் கோயில்) *திருமால் அனந்தசயனத்தில் காட்சி தருவதைப் பெரும்பாணாற்றுப்படை 373 ஆம் பாடலடி எடுத்துரைக்கின்றது. சேரன் தலைநகரில் துளசி மாலை அணிந்த திருமாலின் கோயிலில் மக்கள் உண்ணாநோன்பிருந்து வழிபட்டனர் என்றும், அதிகாலையில் ஆலயமணி ஒலித்ததும் அவர்கள் நீராடி வந்து பகலெல்லாம் மாயோனைப் பரவிப் பின் இரவு நிலவில் தத்தம் இருப்பிடம் சென்றனர் என்பதைப் பதிற்றுப்பத்து 31ஆம் பாடலடிகள் எடுத்துரைக்கின்றன.

விஷ்ணுவின் வியூகம் என்றும் கண்ணனின் அண்ணன் என்றும் வடபுலம் போற்றிய பலராமனைச் (சங்கர்ஷணன்) சங்ககாலத் தமிழகம் சிறப்பாக வணங்கியது. கலப்பை ஆயுதத்தையும், பனைமர வடிவு எழுதப்பெற்ற கொடியையும் உடைய பலராமனை நாற்பெரும் கடவுளரில் ஒருவராகக் குறிப்பிடும் புறநானூறு (56). பனையென்னும் சொல் வருமொழியோடு புணரும்போது ஐகாரம் கெடுவதே



விதியாயினும் (உ.ம். பனங்கிழங்கு, பனஞ்சுளை) பனையும் கொடியும் புணரும்பொழுது ஐகாரம் கெடாது வல்லெழுத்து மிகும் (பனைக்கொடி) என்பார் தொல்காப்பியர் (எழுத்து அதிகாரம் 285). இவ்வாறு பனைக்கொடி பற்றி அவர் தனியே விதி வகுத்ததிலிருந்து அவர் நாளில் அக்கொடி பெரிதும் வழக்கிலிருந்ததென்று ஊகிக்கலாம் என்பர் மு. இராகவ அய்யங்கார். பனைக்கொடி பலராமனுக்கே உரியது என்பதால் தொல்காப்பியர் காலத்தில் பலராம வணக்கம் எய்திய சிறப்பினை உணரலாம். சிலப்பதிகாரமும் பூம்புகாரில் இருந்த முக்கியமான கோயில்களில் ஒன்று பலராமன் கோயில் என்று கூறுப்பிடுகின்றன. (5:171). அழகர்மலை ஆலயத்தில் கண்ணன் திருவடிவத்தோடு பலராமன் உருவும் இருந்ததாகப் பரிபாடல் கூறுகின்றது. (15: 19-29). பலராமனைத் திருமாலின் அவதாரமாகப் பரிபாடலில் (1, 2, 13) கலித்தொகையில் (26, 36, 104, 105) என்னும் பாடல்கள் எடுத்துரைக்கின்றன.

இவ்வாறாக மக்களின் வழிபாட்டில் திருமால் இடம்பெற்ற தன்மையினை அறியமுடிகின்றன.

**துணைநூற்பட்டியல்**


→ பெரும்பாணாற்றுப்படை - நியூ செஞ்சரி புக் ஹவுஸ் (பி) லிட்

→ புறநானூறு - நியூ செஞ்சரி புக் ஹவுஸ் (பி) லிட்

→ திருமுருகாற்றுப்படை- நியூ செஞ்சரி புக் ஹவுஸ் (பி) லிட்

→ நற்றிணை - நியூ செஞ்சரி புக் ஹவுஸ் (பி) லிட்

→ கலித்தொகை - நியூ செஞ்சரி புக் ஹவுஸ் (பி) லிட்

→ பரிபாடல் - நியூ செஞ்சரி புக் ஹவுஸ் (பி) லிட்

→ அகநானூறு - நியூ செஞ்சரி புக் ஹவுஸ் (பி) லிட்

→ மதுரைக்காஞ்சி - நியூ செஞ்சரி புக் ஹவுஸ் (பி) லிட்

→ சிலப்பதிகாரம் - நியூ செஞ்சரி புக் ஹவுஸ் (பி) லிட்